**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 331/2022**

Prosecution witness : 8

| | | | |
|---|---|---|---|
| Name: | சித்ரா | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1, A2, A3,A4, A5 present

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 26.11.2024**

**முதல் விசாரணை**:

நான் தற்போது அரியலூர் மாவட்டம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 08.10.2021 ம் தேதி தூத்துக்குடி போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு உதவி ஆய்வாளர் திருமதி-அனிதாவேணி என்பவர் அலுவலகத்தில் பொறுப்பில் இருந்தபோது தூத்துக்குடி கியூபிராஞ்ச் புலனாய்வுத்துறை காவல் ஆய்வாளர் -திருமதி விஜயஅனிதா என்பவர் தூத்துக்குடி போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு அலுவலகம் ஆஜராகி ஒரு தனி அறிக்கை மற்றும் வெள்ளை நிற 15 சாக்குப்பையில் மொத்தம் 530 கிலோ கஞ்சா மற்றும் மூன்று செல்போன்கள் மற்றும் எதிரி1.அந்தோணிப்பிச்சை, 2.லெனின்ஸ்டன், 3.ஜெய்ஸ்டன் 4.செல்வராஜ் ஆகியோர்களை உதவி ஆய்வாளர் திருமதி.அனிதாவேணி என்பவரிடம் ஒப்படைத்தார். உதவி ஆய்வாளர் அனிதாவேணி தனி அறிக்கை மற்றும் சொத்துக்கள் அனைத்தையும் பெற்று தூத்துக்குடி போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு குற்ற எண்.18/2021, பிரிவு 8(c) r/w 20(b)(ii)(C), 29(1), 25 NDPS வழக்காக பதிவு செய்து என்னுடைய புலன்விசாரணைக்கு வைத்ததை போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு காவல் ஆய்வாளராகிய நான்

08.10.2021ம் தேதி காலை 11.10 மணிக்கு என்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு அலுவலில் இருந்த எதிரி-1 அந்தோணிப்பிச்சை (41), த/பெ.ஜார்ஜ், 281/223, மாதவன் நாயர் காலனி, திரேஸ்புரம், தூத்துக்குடி என்பவரை 11.15 மணிக்கு கைது செய்த விபரத்தை அவருடைய மனைவி சலோசியா என்பவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போதைப்பொருள் நுண்ணறிவுபிரிவு தலைமைக்காவலர்-692-முருகன் மற்றும் காவலர்-1861-உதயக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி-1.அந்தோணிப்பிச்சை என்பவரை விசாரணை செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். 11.15 முதல் 12.00 மணி வரை பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் தலைமைக்காவலர்-முருகன் மற்றும் உதயக்குமார் ஆகியோர்களை சாட்சிகளாக வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அலுவலகத்தில் கியூபிராஞ்ச் ஆய்வாளர் ஒப்படைத்த 530 கிலோ எடையுள்ள 15 வெள்ளை நிற மூட்டைகளில் உள்ள 1வது மூட்டை 35 கிலோகிராம் கஞ்சாவிலிருந்து மாதிரிக்காகவும், ஆய்வுக்காகவும் தலா 25கிராம் வீதம் கஞ்சாவை எடுத்து பாலிதீன் கவரில் மடித்து அதில் NIB சீல் வைத்து அதற்கு S1, S2 என குறியீடு செய்தும்,மீதம் உள்ள 35கிலோ 450கிராம் வெள்ளை நிற சாக்கில் கட்டி அதற்கு P1 என குறியீடு செய்யப்பட்டது. 2வது வெள்ளை நிற சாக்குப்பையில் இருந்து 39கிலோ 500 கிராம் எடையுள்ள கஞ்சாவில் இருந்து மாதிரிக்காகவும், ஆய்வுக்காகவும் தலா 25கிராம் எடுக்கப்பட்டது. மீதம் உள்ள 39.400கிராம் எடுக்கப்பட்டு அதற்கு P2 என்று குறியீடு செய்யப்பட்டது. 3வது வெள்ளை நிற சாக்குப்பையிலிருந்து 39கிலோ கஞ்சாவிலிருந்து மாதிரிக்காவும், ஆய்வுக்காவும் சுமார் 25கிராம் வீதம் எடுத்த மாதிரிக்கு S5, S6 என்று NIB சீல் வைத்தும் மீதம் உள்ள 34 கிலோ 950 கிராம் கஞ்சாவை அதே வெள்ளை நிற சாக்குப்பையில் கட்டி அதற்கு NIB சீல் வைத்து P3 என குறியீடு செய்தும், 4வது வெள்ளை நிற சாக்குப்பையில் இருந்து 35கிலோகிராம் எடையுள்ள கஞ்சாவிலிருந்து தலா 25கிராம் மாதிரிக்காகவும், ஆய்வுக்காகவும் எடுத்து அதற்கு S7,S8 என குறியீடு செய்தும், மீதம் உள்ள 34கிலோ 950கிராம் கஞ்சாவை அதே வெள்ளை நிற சாக்குப்பையில் வைத்து அதற்கு P4 என குறியீடு செய்தும், 5வது வெள்ளை நிற சாக்குப்பையில் இருந்த 35கிலோ 500கிராம் கஞ்சாவில் இருந்து மாதிரிக்காகவும், ஆய்வுக்காகவும் தலா 25கிராம் வீதம் பாலிதீன் கவரில் வைத்து கட்டி அதற்கு NIB சீல் வைத்து S9, S10 என குறியீடு செய்தும், மீதம்

உள்ள 35 கிலோ 450 கிராம் எடையுள்ள கஞ்சாவை NIB சீல் வைத்து P5 என குறியீடு செய்தும், 6 வது வெள்ளை நிற பையில் இருந்த 35 கிலோ கஞ்சாவிலிருந்து தலா 25 கிராம் வீதம் மாதிரிக்காகவும், ஆய்வுக்காகவும் எடுத்து அதற்கு S11, S12 என்று NIB சீல் வைத்து குறியீடு செய்யப்பட்டது. மீதம் உள்ள 34 கிலோ 950 கிராம் கஞ்சாவை NIB சீல் வைத்து கட்டி அதற்கு P6 என குறியீடு செய்தும், 7 வது வெள்ளை சாக்கில் இருந்த 35 கிலோ கஞ்சாவிலிருந்து மாதிரிக்காகவும், ஆய்வுக்காகவும் தலா 25 கிராம் வீதம் மாதிரிக்கு எடுத்து அதற்கு NIB சீல் வைத்து S13, S14 என குறியீடு செய்தும்,மீதம் உள்ள 34 கிலோ 950 கிராம் கஞ்சாவை NIB சீல் வைத்து அதற்கு P7 குறியீடு செய்தும், 8 வது வெள்ளை நிற கஞ்சா பையில் இருந்த 35 கிலோகிராம் கஞ்சாவிலிருந்து தலா 25 கிராம் வீதம் மாதிரிக்காகவும், ஆய்வுக்காகவும் எடுத்து அதற்கு NIB சீல் வைத்து அதற்கு S15, S16 என குறியீடு செய்தும், மீதம் உள்ள 34 கிலோ 950 கிராம் எடையுள்ள கஞ்சாவிற்கு NIB சீல் வைத்து அதற்கு P8 என குறியீடு செய்தும், 9 வது வெள்ளை நிற சாக்குப்பையில் இருந்த 39 கிலோ 500 கிராம் கஞ்சாவிலிருந்து மாதிரிக்காகவும், ஆய்வுக்காகவும் தலா 25 கிராம் வீதம் மாதிரிக்காக எடுத்து NIB சீல் வைத்து அதற்கு S17, S18 என குறியீடு செய்தும், மீதம் உள்ள 39 கிலோ 450 கிராம் கஞ்சாவை சாக்குப்பையில் கட்டி அதற்கு P9 என NIB சீல் வைத்து குறியீடு செய்யப்பட்டது. 10 வது வெள்ளை நிற சாக்குப்பையில் இருந்த 40 கிலோ கஞ்சாவிலிருந்து மாதிரிக்காக தலா 25 கிராம் மாதிரியில் NIB சீல் வைத்து அதற்கு S19, S20 என குறியீடு செய்தும், மீதம் உள்ள 39 கிலோ 950 கிராம் கஞ்சாவிற்கு NIB சீல் வைத்து அதற்கு S21, S22 என குறியீடு செய்துP10 என்று குறியீடு செய்யப்பட்டது. 11 வது வெள்ளை நிற சாக்குப்பையில் இருந்த 35 கிலோகிராம் கஞ்சாவிலிருந்து மாதிரிக்காகவும், ஆய்வுக்காகவும் தலா 25 கிராம் வீதம் மாதிரிக்கு எடுக்கப்பட்டு அதற்கு S23, S24 என்று குறியீடு செய்தும் மீதம் உள்ள 34 கிலோ 950 கிராம் கஞ்சாவிற்கு P11 என்று குறியீடு செய்தும் NIB சீல் வைத்து ஆய்வுக்காக அனுப்பப்பட்டது. 12 வது வெள்ளை நிற சாக்கில் இருந்த 30 கிலோ கஞ்சாவிலிருந்து மாதிரிக்காக S25, S26 என குறியீடு செய்து NIB சீல் வைத்தும், மீதம் உள்ள 29 கிலோ 950 கிராம் கஞ்சாவில் NIB சீல் வைத்து அதற்கு P12 என குறியீடு செய்தும், 13 வது வெள்ளை நிற சாக்கில் இருந்த 35 கிலோ கிராம் கஞ்சாவிலிருந்து மாதிரிக்காக தலா 25 கிராம் மாதிரியில் NIB சீல் வைத்து அதற்கு S27. S28 மீதம் உள்ள 34 கிலோ 950 கிராம் கஞ்சாவில் NIB

சீல்வைத்து அதற்கு P13 என குறியீடு செய்தும், 14 வது வெள்ளைநிற சாக்கில் இருந்த 30 கிலோ கஞ்சாவிலிருந்து தலா 25 கிராம் வீதம் மாதிரிக்காக NIB சீல் வைத்து அதற்கு S27, S28 என குறியீடு செய்தும், மீதம் உள்ள 29 கிலோ 950 கிராம் கஞ்சாவில் NIB சீல் வைத்து அதற்கு P14 என குறியீடு செய்தும், 15 வது வெள்ளை நிற சாக்கில் இருந்த 35 கிலோ கிராம் கஞ்சாவிலிருந்து மாதிரிக்காக தலா 25 கிராம் எடையுள்ள கஞ்சாவில் NIB சீல் வைத்து அதற்கு S29, S30 என குறியீடு செய்தும், மீதம் உள்ள 34 கிலோ 950 கிராம் எடையுள்ள கஞ்சாவிற்கு P15 என்று குறியீடு செய்யப்பட்டது. சாட்சிகள் தலைமைக்காவலர்- முருகன் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். மேற்படி சாட்சிகள் முன்னர் 11.15 மணிக்கு எதிரி-2-லெனின்ஸ்டன் என்பவரை கைது செய்தேன். 13.45 மணியிலிருந்து 3 வது எதிரி ஜெயின்ஸ்டன் என்பவரை கைது செய்து உச்ச நீதிமன்ற கட்டளையை பின்பற்றினேன். 10.10.2021 அன்று சாட்சிகள் ஜீவமணி, கியூபிராஞ்ச் பிரிவு உதவி ஆய்வாளர் வில்லியம்பிரான்சிஸ், கந்தசாமி , செல்வக்குமார், சங்கர், ராமன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் 1 லிருந்து 4 வரை உள்ள எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்து மேற்படி வழக்கில் சொத்துக்கள் மற்றும் செல்போன்கள் ஆகியவற்றை படிவம்-91 ன் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 10.10.2021 ம் தேதி சம்பவ இடம் சென்று சாட்சிகள் சந்திரன், சுரேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். 13.10.2021 ம் தேதி வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை மல்கானாவிற்கு பாதுகாப்பிற்காக அனுப்பி வைத்தேன். 18.10.2021 ம் தேதி வழக்கில் கைப்பற்றப்பட்ட IND TN 12 MO 2669 என்ற எண்ணுள்ள டிபெரில் என்று எழுதப்பட்ட வள்ளத்தின் உரிமையாளர்-இசக்கியம்மாள் என்வரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 11.11.2021 ம் தேதி மீன்வளதுறை ஆய்வாளர் அவர்களிடம் சான்று பெற்றேன். விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் ஆய்விற்காக அனுப்பப்பட்ட கஞ்சாவிலிருந்து பகுப்பாய்வு அறிக்கையினை 12.11.2021 ம் தேதி பெற்று திரு.வேல்முருகன் சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் தலைமறைவாக இருந்த எதிரி-சுரேஷ் என்பவரை 12.01.2022 ம் தேதி கைது செய்தும், அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகளின் முன்னிலையில் பெறப்பட்டு அவரிடமிருந்த செல்போன் ஒன்றினை படிவம்-91 ன் மூலமாக பெற்று

நீதிமன்றத்திற்கு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி வழக்கில் எனது புலன்விசாரணையை முடித்து 23.03.2022 ம் தேதி எதிரிகளின் மீது குற்ற அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். டிபெரில் என்று எழுதப்பட்ட வள்ளம் மற்றும் 3 கைபேசிகள் விபரம் அடங்கிய படிவம்-91 **அ.சா.ஆ.13** ஆகும். (1 வது எதிரி தரப்பில் கைப்பற்றப்பட்ட படகு அங்கு இல்லை என்பதால் ஆட்சேபனை எழுப்பப்பட்டது. எனவே ஆட்சேபனையுடன் அ.சா.ஆ.13 குறியீடு செய்யப்படுகிறது.) (பின்னர் 2 வது மற்றும் 4 வது எதிரிகள் தரப்பிலும் மேற்சொன்ன ஆட்சேபனை எழுப்பப்பட்டது) P1 முதல் P15 மற்றும் S1 முதல் S30 என குறியீடு செய்யப்பட்ட கஞ்சா பொட்டலங்கள் குறித்து விபரங்கள் அடங்கிய படிவம்-91 **அ.சா.ஆ.14 முதல் 21** ஆகும். 5 வது எதிரி சுரேசிடம் கைப்பற்றிய செல்போன் மற்றும் ஏர்டெல் சிம்கார்டு குறித்து விபரங்கள் அடங்கிய படிவம்-91 **அ.சா.ஆ.22** ஆகும். சம்பவ இடத்தில் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.23 மற்றும் 24** ஆகும். 5 வது எதிரி சுரேசின் கைது தொடர்பாக போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல் ஆய்வாளர் அவர்கள் உயர்அதிகாரிக்கு கொடுத்த 57 ன் படியான விரிவான அறிக்கை **அ.சா.ஆ.25** ஆகும். S1 முதல் S30 என்று குறியீடு செய்யப்பட்டு பகுப்பாய்வுக்கு சென்று திரும்பிய கஞ்சா பொட்டலங்கள் **சா.பொ.1 முதல் 30** ஆகும். P1 முதல் P15 என குறியீடு செய்யப்பட்ட மீதம் உள்ள கஞ்சா **சா.பொ.31 முதல் சா.பொ.45** ஆகும். (08.10.2021 ம் தேதி கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கஞ்சாவின் எடைக்கும் 13.10.2021 ம் தேதி மல்கானாவில் ஒப்படைக்கப்பட்டதாக சொல்லப்படும் கஞ்சாவின் எடைக்கும் வேறுபாடு அல்லது வித்தியாசம் உள்ளது என 1 வது எதிரி தரப்பில் இந்த சான்றுப்பொருளை குறியீடு செய்வதற்கு ஆட்சேபனை செய்யப்பட்டது) இந்த வழக்கில் எதிரிகளிடம் இருந்த கைப்பற்றப்பட்ட 1 முதல் 4 வரையிலான கைபேசிகள் **சா.பொ.46 முதல் 49** ஆகும். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட டிபெரில் என எழுதப்பட்ட வள்ளத்தின் புகைப்படங்கள் 6 எண்ணம்- **அ.சா.ஆ.26 வரிசை**.

<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எங்களுடைய NIB காவல் நிலையத்திலிருந்து கியூபிராஞ்ச் அலுவலகம் சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் தான் உள்ளது என்றால் சரிதான். எங்களுடைய காவல்நிலையத்தில் ஒவ்வொரு நாளும் யார் யார் எத்தனை

மணிக்கு என்ன பணிக்காக வருகிறார்கள் அவர்களுக்கு என்ன பணி ஒதுக்கப்பட்டது என்பதைக்காட்டும் பதிவேடு உள்ளது என்றால் சரிதான். அந்த பதிவேட்டை பார்க்கும் பட்சத்தில் அன்றைய தினம் வேலைக்கு வந்தவர்களை உறுதி செய்யமுடியும் என்றால் சரிதான். எங்களுடைய காவல்நிலைய ஆள்வரை எல்கைக்கு உட்பட்ட இடங்களில் எல்லாம் நாங்கள் கண்காணித்துக்கொண்டுதான் இருப்போம் என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பவ இடமாக சொல்லப்படுவது எங்கள் காவல்நிலைய ஆள்வரை எல்கைக்கு உட்பட்டதுதான் என்றால் சரிதான். போதைப்பொருள் சம்பந்தமாக எந்த காவல்நிலையத்திலிருந்து தகவல் பெறப்பட்டாலும் எங்களுக்கு தகவல் சொல்லப்படும் என்றால் சரிதான். மற்ற காவல்நிலைய அதிகாரிகள் இதுபோன்ற போதைப்பொருள் வழக்குகளை எங்கள் போதைப்பொருள் தடுப்பு காவல்பிரிவு சிறப்பாக கையாளும் என்றால் சரிதான். குற்றம் நிகழ்ந்ததாக சொல்லப்படும் தருவைக்குளம் கடற்கரை பகுதிக்கு அருகில் கடலோர காவல்படைக்காவல் நிலையம் உள்ளது மற்றும் தருவைக்குளம் காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். நான் ரவுண்சில் இருந்ததால் எனக்கு எப்போது தகவல் கிடைத்தது என்று சரியாக ஞாபகம் இல்லை. எனக்கு சார்பு ஆய்வாளர் அலைபேசியில் தகவல் சொன்னார் என்றால் சரிதான். நான் அன்றைய தினம் வழக்கை கேள்விப்பட்டபின்னர் எப்போது காவல்நிலையம் சென்றேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் இந்த வழக்கு சம்பந்தமாக கியூபிராஞ்ச் அலுவலகம் சென்றேனா என்றால் இல்லை. அ.சா.1 தங்களுடைய பொதுநாட்குறிப்பில் தனக்கு கிடைத்த தகவல் குறித்தும் அதை உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்ததை குறித்தும் யார், யார் அந்த பணியை மேற்கொண்டார்கள் என்றும் எழுதி அதை என்னிடம் காண்பித்து பிரதி கொடுத்ததாக சொன்னால் சரியல்ல. பொதுவாக பிரிவு42(2) படி தயாரிக்கக்கூடிய ஆவணத்தில் எத்தனை மணிக்கு யாரால், எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், அதை யார் மூலமாக இல்லை எதன் மூலமாக தனது உயர் அதிகாரிக்கு அனுப்பி வைத்தார் என்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி எத்தனை மணிக்கு என்று யார் மூலம் பெற்றுக்கொண்டார் என்ற விபரமும் காணப்படவேண்டும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் நான் 42(2)ன் கீழ் ஒரு ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மனு செய்து அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சட்டப்பூர்வமான நடவடிக்கை

எடுக்கும் பொறுப்பு என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். நான் அந்த ஆவணம் சம்பந்தமாக எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான். கியூபிராஞ்ச் மூலமாக என்னுடைய சார்பு ஆய்வாளருக்கு என்னென்ன ஆவணங்கள் வழங்கப்பட்டதோ அதை அனைத்தையும் முதல் தகவல் அறிக்கையில் காண்பித்திருக்கிறோம் என்றால் சரிதான். அதை தவிர மற்ற ஆவணங்கள் எல்லாம் எங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எங்கள் சார்பு ஆய்வாளரை தவிர வேறு யாரும் தகவல் சொன்னார்களா என்றால் இல்லை. ஒரு வழக்கில் குற்றவாளிகளை எங்கள் வசம் பெறும்போதோ, அல்லது சம்பந்தப்பட்ட வழக்கில் பொருடகளை பெற்றுக்கொள்ளும் போதோ முறையான ஆவணங்களின் மூலம் பெறவேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்தமட்டிலும் எதிரிகள் எத்தனை மணிக்கு எப்படி கைதுசெய்யப்படடார்கள் என்பது எனக்கு தெரியாது, எங்கள் காவல்நிலையத்தில் வைத்துதான் நான் பார்த்தேன் என்றால் சரிதான். எதிரிகள் ஒப்படைக்கப்பட்டபோதோ, அல்லது வழக்கு சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டபோதோ முதல் தகவல் அறிக்கை தவிர வேறு ஆவணங்கள் சார்பு ஆய்வாளரால் தயார் செய்யப்பட்டு தரப்பட்டதா என்றால் இல்லை. அன்றைய தினம் எங்கள் காவல்நிலையத்தில் யார் பாரா பொறுப்பில் இருந்தார்கள் என்று தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. காவல்நிலையத்திற்கு உள்ளே குற்றவாளிகள், பொருட்கள் கொண்டுவரப்படும்போது பாரா அனுமதி பெற்றுத்தான் உள்ளே வரவேண்டும் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சொல்லப்படும் நேரம் என்னவென்றால் 10.00 மணி. 9.15 மணிக்கு எனக்கு தகவல் கிடைத்து என்றால் சரிதான். 10.30 மணிக்கு நான் காவல்நிலையம் சென்றேன். நான் வந்தபிறகு தனி அறிக்கை மற்றவற்றை நான் சரிபார்த்து அதன் பின்னர் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தஉடன் அதை நீதிமன்றத்திற்கு அனுப்பினேனா என்றால் உடனே அனுப்பவில்லை கைதிகளை காவல் அடைப்பிற்கு அனுப்பியபோது சேர்த்து அனுப்பினேன். வழக்கு சம்பந்தப்பட்ட நீதித்துறை நடுவர் நீதிமன்றம் விளாத்திகுளம் என்பதால் காவல் அடைப்பிற்கு அனுப்பியபோது சேர்த்து அனுப்பினேன். எங்கள் காவல்நிலையத்தில் துணை கண்காணிப்பாளர் உள்ளாரா என்றால் உள்ளார். அன்றைய தினம் அவர் பணியில் இருந்தாரா என்றால் எனக்கு

ஞாபகம் இல்லை. அவருக்கு இந்த வழக்கை பற்றி தெரியும். அன்று நடந்த விபரங்கள் பற்றி தெரியும் என்றால் சரிதான். கியூபிராஞ்ச் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் எங்கிருக்கிறது என்று எனக்கு தெரியாது. கியூபிராஞ்சிலிருந்து அவர்கள் உயர் அதிகாரிகளுக்கு இந்த வழககு தகவல் சம்பந்தமாக மின்னஞ்சல் கொடுக்கப்பட்ட விபரம் அது எப்போது கொடுக்கப்பட்டது, எந்த விலாசத்திலிருந்து கொடுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் மின்னஞ்சலைப்பற்றி என்னிடம் எதுவும் சொல்லிக்கொள்ளவில்லை. அப்படி வாக்குமூலத்தில் என்னிடம் சொல்லியிருந்தால் அந்த விபரத்தை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருப்பேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கு சம்பந்தமாக கியூ பிராஞ்ச் காவல்கண்காணிப்பாளரை சந்தித்தோ, விசாரித்தோ எந்த வாக்குமூலமும் பெற்றேனா என்றால் இல்லை. என்னிடம் கியூபிராஞ்சிலிருந்து கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் தனி அறிக்கை, பிரிவு -57 ன் கீழ் அ.சா.1 கொடுத்தாக சொல்லும் அறிக்கை, அவருடைய வாக்குமூலம் எல்லாவற்றிலும் 4.30 மணிக்கு தகவல் கிடைத்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 4.30 மணிக்கு தகவல் கிடைத்தாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பொதுவாக பிரிவு-57 ன் படி தயாரிக்கப்படும் அறிக்கையானது இதுபோன்ற வழக்குகளில் தன்னுடைய உடனடி அல்லது அடுத்த நேரடி உயர் அதிகாரிக்குத்தான் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். அ.சா.5 57 ன் படியான அறிக்கையை அவரது நேரடி உயர் அதிகாரிக்கு கொடுக்காமல் எனக்க கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 பிரிவு 42(2)ன் கீழ் அறிக்கை தயார் செய்து உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தாக தனது தனிஅறிக்கையிலோ, 57 ன்படியான அறிக்கையிலோ, வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எங்களிடம் தனி அறிக்கை சமர்ப்பித்தபோது அத்தாட்சியையும், தனி அறிக்கையையும் சமர்ப்பித்தாக உள்ளது என்றால் சரிதான். அன்றைய தினம் இந்த வழக்கு சம்பந்தமாக நான் காவல்நிலையத்தை விட்டு வெளியே எங்கும் செல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய வாக்குமூலத்திலும், தனி அறிக்கையிலும் குற்றப்பிரிவு புலனாய்வுத்துறை காவல் ஆய்வாளராகிய நான் மற்றும் உதவி ஆய்வாளர்கள் திரு.ஜீவமணிதர்மராஜ், வில்லியம்ஸ், இருதய ராஜ்குமார் மற்றும் தருவைக்குளம் கிராம நிர்வாக அலுவலர் ராஜன், கிராம உதவியாளர் பொன்னுச்சாமி ஆகியோர் சகிதமாக சென்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 தன்னுடன் சம்பவ

இடத்திற்கு தகவல் கிடைத்து போனபோது உதவி ஆய்வாளர்கள் அவர்களது இருசக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பந்தப்பட்ட பொருட்களை எந்த வாகனத்தில் யார், எத்தனைமணிக்கு கொண்டுவந்தார்கள் என்ற விபரம் எனது விசாரணையில் துலங்கவில்லை என்றால் சரிதான். கையில் தூக்கிகொண்டு வந்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் குற்றவாளிகளை சோதனை செய்துதான் காவல்நிலையத்திற்குள் அனுமதித்தோம் என்றால் சரிதான். எல்லா எதிரிகளையும் நான் விசாரித்தேன் என்றால் சரிதான். மற்ற குற்றவாளிகள் வாக்குமூலங்களை பெற்றபோது இந்த வழக்கிற்கும் அவர்களுக்கும் தொடர்பு இல்லை என்பது தெரியவரும் என்பதனால் அதை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் கைது செய்யப்படாத புதிய குற்றவாளிகளை பற்றி அறியும் பட்சத்தில் உடனடியாக மாறுதல் தகவல் அறிக்கை தயார் செய்து அந்த புதிய குற்றவாளிகளை வழக்கில் சேர்த்து கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்வோம் என்றால் சரிதான். எனக்கு கியூபிராஞ்சிலிருந்து கொடுக்கப்பட்ட தனி அறிக்கை, அத்தாட்சி மற்ற விபரங்களிலிருந்தும் என்னுடைய விசாரணையில் இருந்தும் 1 வது எதிரி மற்றும் குற்றவாளி இல்லை. அப்படி இருக்கும் பட்சத்தில் மற்ற எதிரிகளிடம் நான் வாக்குமூலம் வாங்காததற்கு பிரத்தியேகமான காரணம் எதுவும் உண்டா என்றால் இல்லை. 1 வது எதிரியிடமிருந்து தாங்கள் சொன்ன நேரத்தில், சொன்னவிதத்தில் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக நான் பொய்யாக தயார் செய்த ஆவணத்தில் 1 வது எதிரியின் கையெழுத்தை மிரட்டி பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்கு மூலத்தை சார்பு ஆய்வாளர் கணினியில் தட்டச்சு செய்தார். ( தற்போது சாட்சி தான் டிக்டேட் செய்ததை கம்யூட்டருக்கென்று தனியாக உள்ள போலீசார் டைப் செய்தார் என கூறினார்) அவரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் 1 வது எதிரியிடம் பெறப்பட்டதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்த வழக்கின் முக்கிய குற்றவாளியாக, வழக்கு சம்பந்தப்பட்ட போதைப்பொருட்களை கொண்டுவந்த நபராக அறியப்பட்ட சிவா என்பவரையும், 5 வது எதிரியையும் சேர்த்து எந்த மாறுதல் அறிக்கையும் நான் தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் உடனே அனுப்பவில்லை. நான் மாறுதல் அறிக்கை தயார் செய்ததாக சொல்லப்படுவதில் NIB CID தூத்துக்குடி cr.No.18/2021 என்றும் 8(c),

20(b)(ii)(C),29(1),25**NDPS ACT** என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் போட்ட பிரிவுகளில் மாறுதல் செய்து ஒரு அறிக்கையும், அதிலிருந்து ஒரு மாறுதல் செய்து ஒரு அறிக்கையும் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதவர்களை சேர்த்து சரியாக புலன் விசாரனை செய்யாமல் உண்மை குற்றவாளிகளின் வழக்கின் உண்மை தன்மையை மறைப்பதற்காக மாறுதல் அறிக்கை மற்றும் சில ஆவணங்களை நான் நீதிமன்றத்திற்கு ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து நான் பெற்றுக்கொண்டதாக சொல்லப்படும் அலைபேசிகளின் அலைபேசி எண் மற்றும் சிம்கார்டை ஆகிய விபரங்களை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறேன் என்றால் சரிதான். இந்த எதிரிகளின் அலைபேசிகளின் கால்டீடெய்ல்ஸ் மற்றும் சிவா என்பவரின் கால்டீடெய்ல் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

நீதிமன்றத்தின் நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு
செய்யப்பட்டு வாசித்துக்காட்ட சாட்சியால் சரி
என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.